## பாடில்லா பயிர் சாகுபடி… அள்ளிக் கொடுக்கும் அவுரி…

10.05.2013


காயவைக்கப்படும் அவுரி இலைகள்...



செயற்கை சாயங்கள் கண்டுபிடிக்கப்படாத காலத்திலும் ஓவியங்கள், துணிகள் ஆகியவற்றில் பலவித வண்ணங்களைப் பயன்படுத்தி வந்தார்கள் நம் முன்னோர்கள். இதைத்தான் அதிகாரப்பூர்வமாக இன்றைக்கும் பறைச் சாற்றிக் கொண்டிருக்கின்றன, சித்தன்னவாசல், தஞ்சாவூர் போன்ற வரலாற்றுச் சின்னங்களில் உள்ள மூலிகை ஓவியங்கள். அப்படி வண்ணமேற்றும் பலவித மூலிகைகளில் ஒன்றுதான் அவுரி. தற்பொழுது இந்தியாவில் வெகு சில இடங்களில் மட்டும்தான் அவுரி சாகுபடி செய்யப்படுகிறது. குறைந்த செலவில், அதிக பராமரிப்புத் தேவைப்படாமல் வளர்த்தெடுக்கக் கூடிய பயிர்களில் ஒன்றான இந்த அவுரி, விழுப்புரம் மாவட்டம், பேரணி கிராமத்தைச் சேர்ந்த தேவநாதன் வயலில் தற்பொழுது சலசலத்துக் கொண்டிருக்கிறது. சுற்றிலும் வறண்டு கிடக்கும் நிலங்களுக்கு இடையில், தேவநாதனின் தோட்டத்தில் பசுமைக் கட்டி நிற்கின்றன அவுரிச் செடிகள்.

**ஆடு மாடுகளால் பாதிப்பில்லை**

பத்தாவது படித்து முடித்து விவசாயம் பார்க்க ஆரம்பித்தார் தேவநாதன். மொத்தம் 25 ஏக்கர் நிலம் இருக்கிறது. அதில் ஏழு ஏக்கரில் அவுரி சாகுபடி செய்கிறார். மற்ற இடங்களில் கரும்பு, கடலை, நெல், மா, தேக்கு இருக்கிறது.

இவர் தாத்தா அவுரி சாகுபடி செய்திருக்கிறார். இப்பொழுது இவர் நண்பர் மூலமாக உத்திரவாத விலை கிடைக்க ஆரம்பித்த பிறகு 10 வருடமாக அவுரியை சாகுபடி செய்கிறார். இதற்குப் பெரிய அளவில் தண்ணீர், உரம் தேவைப்படுவதில்லை. ஆடு, மாடுகளும் இதை மேய்வதில்லை. பெரிதாக கவனிப்பு இல்லாமலே, நல்ல வருமானம் கிடைக்கிறது. நெல் அறுவடைக்குப் பிறகு கூட அவுரியைப் பயிர் செய்யலாம். எள், கரும்புக்கு ஊடுபயிராகவும் செய்யலாம்.

**ஏக்கருக்கு 7 கிலோ விதை**

அவுரியின் வயது ஓராண்டு. எல்லா மண்ணுக்கும் ஏற்றது என்றாலும், செம்மண் மற்றும் மணல் பாங்கான நிலங்களில் சிறப்பாக வளரும். கார்த்திகை மாதம் முதல் ஆடி மாதம் வரை விதைக்கலாம். கார்த்திகைப் பட்டத்தில் விதைத்தால், மூன்று முதல் நான்கு முறை அறுவடை செய்யலாம். அடுத்தடுத்த பட்டங்களில் விதைத்தால் இரண்டு அறுவடைகள் வரை செய்யலாம். சாகுபடி நிலத்தில் 5 டிராக்டர் எருவைக் கொட்டிக் களைத்துவிட்டு, மூன்று முறை உழுது, மண்ணைப் புட்டு பதத்துக்கு மாற்றிக் கொள்ள வேண்டும். பிறகு, ஏக்கருக்கு ஏழு கிலோ அவுரி விதைகளை, உளுந்து விதைப்பது போல, உழுது கொண்டே விதைக்க வேண்டும். விதைத்த 7-ம் நாளில் விதைகள் முளைப்பு எடுத்துவிடும். 35-ம் நாளில் களை எடுத்துவிட்டு, 40-ம் நாளில் முதல் பாசனம் செய்ய வேண்டும். அந்த நேரத்தில் மழை பெய்தால் பாசனம் தேவையில்லை. அதற்குப் பிறகு ஈரப்பதத்தை பொருத்து, 20 நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் கட்டினால் போதும். பூச்சி – நோய் தாக்குதல் இருக்காது. தண்ணீர் கட்டுவதைத் தவிர, வேறு எந்தவித பண்டுதமும் பார்க்கத் தேவையில்லை.

**120-ம் நாளில் அறுவடை**

70 முதல் 90 நாட்களில் அவுரி 2 முதல் 3 அடி உயரத்துக்கு வளர்ந்து, பூவெடுக்க ஆராம்பித்து விடும். 120-ம் நாளுக்கு மேல் அறுவடை செய்யலாம். தரையில் இருந்து அரையடி உயரம் விட்டு செடியை அறுவடை செய்ய வேண்டும். அதற்குப் பிறகு 60 நாட்கள் இடைவெளியில் இரண்டு முதல் மூன்று அறுவடைகள் வரை செய்யலாம்.
மறுதாம்பு விடும் போது, கரும்புக்கு இடை உழவு செய்வது போல் அவுரித் தூர்களுக்கு இடையில் இடை உழவு செய்ய வேண்டும். அப்போதுதான் வளர்ச்சி நன்றாக இருக்கும். மறுதாம்புப் பயிறுக்கு 20 நாட்களுக்கு ஒரு முறை பாசனம் மட்டும் செய்தால் போதும்.

**42 ஆயிரம் வருமானம்**

சாகுபடியைக் கூறி முடித்த தேவநாதன், நிறைவாக வருமானம் பற்றிக் கூறினார்.
ஒரு ஏக்கரில் இருந்து ஒரு அறுவடைக்கு இரண்டு டன் தழை கிடைக்கும். குறைந்தது மூன்று அறுவடை என்று வைத்துக் கொண்டாலும், 6 டன் தழை கிடைக்கும். ஒரு டன் தழைக்கு 5 ஆயிரம் ரூபாயில் இருந்து 10 ஆயிரம் ரூபாய் வரை சந்தை நிலவரத்தைப் பொருத்து விலை கிடைக்கும். சராசரியாக 7 ஆயிரம் ரூபாய் என்று வைத்துக் கொண்டாலும் 42 ஆயிரம் ரூபாய் வருமானம் கிடைக்கும்.
இதில் உழவு, விதை, எரு, தண்ணீர் கட்டும் செலவு என்று 10 ரூபாய் போனாலும் (அறுவடை, போக்குவரத்துச் செலவுகள் வியாபாரியைச் சேர்ந்தது) 32 ஆயிரம் ரூபாய் லாபமாகக் கிடைக்கும் என்றார்.

**தொடர்புக்கு**

தேவநாதன், அலைபேசி : 9 8456 22728

சரவணன், அலைபேசி : 94432 35127

மூலிகையியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்

தொலைபேசி : 0422 – 6611365